முதன்மை அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

**முன்னிலை: திருமதி K.அறிவொளி, M.A., M.L.,**

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21-ம் நாள் செவ்வாய்கிழமை.

**குற்றவியல் மேல்முறையீடு வழக்கு எண்.97/2025**

(*CNR.No.TNSV01002670/2024*)

| | |
|---|---|
| விசாரணை நீதிமன்றம் | நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சிவகங்கை. |
| விசாரணை நீதிமன்ற வழக்கு எண் | ஆண்டு பட்டிகை வழக்கு எண்.58/2014 |
| மேல்முறையீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | தமிழ் நாடு அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய<br>குற்ற எண்.10/2013 |
| எதிர்மேல்முறையீட்டாளர்களின் பெயர் | 1. மணிகண்டன் (வயது 48)<br>த/பெ.சந்திரன்,<br>*13A*, துகாவூர்,<br>திருப்பத்தூர் சிவகங்கை,<br>அரசு மதுபான கடை எண்:7567,<br>(மேற்பார்வையாளர்)<br><br>2. ராமராஜா (வயது 43)<br>த/பெ.முத்துராஜா,<br>*3A,* பாரதி தெரு,<br>திருப்பத்தூர் சிவகங்கை,<br>அரசு மதுபான கடை எண்:7567,<br>(விற்பனையாளர்)<br><br>3. பிருந்தாவன் (வயது 48)<br>த/பெ.சண்முகம்,<br>*D*22, 1 மருதுபாண்டியர் நகர்,<br>திருப்பத்தூர், சிவகங்கை.<br>அரசு மதுபான கடை எண்:7567,<br>(விற்பனையாளர்) |
| விசாரணை நீதிமன்ற தீர்ப்பு | விசாரணை நீதிமன்றம், அரசு தரப்பு |

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 16:04:09 +0530

21.04.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

| | |
|---|---|
| | மற்றும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் 1 முதல் 3 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் முழுவதுமாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை 1 முதல் 3 எதிரிகளுக்கு வழங்கி, 1வது எதிரி இதச பிரிவு 409-கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்தும், 2, 3 எதிரிகள் இதச பிரிவு 408-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, மேற்படி 2, 3 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகின்றது. 1 முதல் 3 எதிரிகளின் பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |
| தண்டனை உறுதிபடுத்தப்பட்டதா, மாற்றியமைக்கப்பட்டதா அல்லது ரத்து செய்யப்பட்டதா, | **இறுதியாக,** இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தும், சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, ஆண்டுபட்டிகை வழக்கு எண்.58/2014-ல் கடந்த 19.07.2023-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை உறுதி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| மேல்முறையீடு செய்யப்பட்ட நாள் | 24.07.2024 |
| ஆஜராகப் பணிக்கப்பட்ட நாள் | 27.01.2026 |
| இந்நீதிமன்ற தீர்ப்பு | 21.04.2026 |

இந்த குற்றவியல் மேல்முறையீடு என் முன்பு 01.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.*A*.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.*K*.அழகப்பன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றப்

பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## தீ ர் ப் பு ரை-

இந்த குற்றவியல் மேல்முறையீட்டில் ஆண்டு பட்டிகை வழக்கு எண்:58/2014-ல் உள்ள சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய காவல் ஆய்வாளர் மேல்முறையீட்டாளர் ஆவார்.

**2. எதிர்மேல்முறையீட்டாளர்/அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:-**

கடந்த 25.05.2013-ம் தேதி இவ்வழக்கின் சாட்சி-1 தமிழ்நாடு வாணிபக்கழகம் டாஸ்மார்க் மாவட்ட மேலாளர் திரு.சிலம்பரசன் தலைமையில் திருப்பத்தூர் டாஸ்மார்க் கடை எண் 7567-ல் நூறு சதவீத தணிக்கை குழு மேற்கொண்ட போது தணிக்கை இறுதியில் சரக்கு வரவு இருப்பு மற்றும் விற்பனை தொகையில் ரூ.7,54,890/- குறைவு தொகை கண்டறியப்பட்டதில் 1 முதல் 3 எதிரிகள் மூவரும் சேர்ந்து தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட சொத்திற்கு கணக்கு காட்ட கடமைப்பட்டவர்களாக இருந்தும் பொதுக்கெட்ட எண்ணத்துடன் மேற்படி விற்பனை தொகை ரூ.7,54,890/-யை வங்கியில் செலுத்தாமல் அரசு பணத்தை கையாடல் செய்து குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்து குற்றம் புரிந்துள்ளதாக 1 முதல் 3 எதிரிகள் மீது இதச பிரிவு 409, 34-ன் கீழ் சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக அரசு தரப்பில் அ.சா.1 முதல்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:04:25 +0530

அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்றுப் பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

**4.** விசாரணை நீதிமன்றம், அரசு தரப்பு மற்றும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் 1 முதல் 3 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் முழுவதுமாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை 1 முதல் 3 எதிரிகளுக்கு வழங்கி, 1வது எதிரி இதச பிரிவு 409-கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்தும், 2, 3 எதிரிகள் இதச பிரிவு 408-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, மேற்படி 2, 3 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்தும், 1 முதல் 3 எதிரிகளின் பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிட்டு தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி தண்டனைத் தீர்ப்பில் குறைவுற்றதாக கருதிய மேல்முறையீட்டாளர் இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**5. மேல்முறையீட்டுக் குறிப்பாணையின் சுருக்கம்:**

*i)* விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்ட விதிகளுக்கு புறம்பாகவும் சாட்சிய சட்டத்திற்கு முரணாகவும் பகரப்பட்டுள்ளது.

*ii)* மேற்படி விசாரணை நீதிமன்றம் வனையப்பெற்ற குற்றச்சாட்டுகளில் இதச 409, 408 பிரிவுகளின் படி கண்டுள்ள சரத்துகளின் படி புகாரும் முதல் விசாரணை

அமைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு எதிரிகளுக்கு குற்றவாளிகள் என தீர்மானித்து தீர்ப்பு வழங்கியிருக்க வேண்டும். மேற்படி பிரிவுகளின் கீழ் விசாரணை நீதிமன்றம் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டிருந்த போதும் அதனை மெய்ப்பிக்கும் விதமாக அரசு தரப்பு சாட்சிகள் தனது சாட்சியத்தில் சொல்லப்பட்டிருந்த நிலையில் மேற்படி குற்றப் பிரிவுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளன என கருத்தில் கொண்டு விசாரணை நீதிமன்றம் இந்த எதிரிகளை குற்றவாளிகள் என தீர்மானித்து தண்டனை வழங்கியிருக்க வேண்டும்.

*iii)* மேலும் புகார்தாரர் தனது புகாரில் கடந்த 25.05.2013 ஆம் தேதி டாஸ்மாக் கடை எண்.7567-ல் சரக்குகளின் எண்ணிக்கை பற்றி தணிக்கை செய்த போது அங்கு மேற்பார்வையாளராக பணிபுரிந்த எதிரி ரூ.7,54,890/- பணம் அரசிற்கு செலுத்தாமல் கையாடல் செய்த விவரம் தெரிய வந்து புகார் அளிக்கப்பட்டு அதன்படி மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் குற்ற எண்:10/2013 என இதச பிரிவுகள் 409, 420 படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் விசாரணை மேற்கொண்டு 2, 3 எதிரிகளை கைது செய்து ஒப்புதல் சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து 2, 3 எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி மற்ற சாட்சிகளை விசாரித்து வாக்கு மூலம் பெற்று பின்பு இதச பிரிவு 409, 34 படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*iv)* மேற்படி விசாரணை நீதிமன்றம் இதச பிரிவுகள் 409, 408-ன் படியான குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ள நிலையில் மேற்படி பிரிவு பொது ஊழியர் அல்லது

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:04:43 +0530

வங்கியர், வணிகர், தரகு வணிகர், தரகர், அட்டர்னி அல்லது முகவர் என்பவரின் தொழில்முறையில் எந்த வகையிலாவது ஒரு சொத்தின் மீது ஏதேனும் ஆதிக்கம் பெற்று அல்லது அவரிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தால் அந்த சொத்தைப் பொறுத்து குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்கின்ற நபர் தண்டிக்கப்பட வேண்டிய நபர் ஆவார். மேலும் பிரிவு 405 இதச படி பொது ஊழியர் எந்த முறையிலும் ஒரு சொத்து ஒப்படைக்கப்பட்டிருந்தது அல்லது சொத்தின் மீது ஆதிக்கம் பெற்றிருந்த அந்த சொத்தை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்கின்ற அல்லது அந்த சொத்தை தனது சொந்த உபயோகத்திற்கு மாற்றுகிற நபர் குற்றமுறு நம்பிக்கை மோசடி செயலில் ஈடுபட்ட நபர் ஆகிறார்.

*v)* மேற்படி பிரிவின் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட 1, 2, 3 எதிரியானவர்கள் பொது ஊழியர்கள் என்ற நிலையில் அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்த சொத்தினை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்து குற்றமும் நம்பிக்கை மோசடி செயலில் ஈடுபட்டிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டு நிரூபணம் ஆகியுள்ள நிலையில் விசாரணை நீதிமன்றம் மேற்படி பிரிவுகள் 409, 408 இதசவின் கீழ் குற்றவாளிகள் என தீர்மானித்து எதிரிகளுக்கு தண்டனை வழங்கியிருக்க வேண்டும். அதை தவிர்த்து மாறாக விடுதலை செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

*vi)* மேற்படி வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு நிரூபணம் செய்யும் விதமாகவும், மேற்படி குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்கும் விதமாகவும், விசாரணை நீதிமன்றத்தில்

சாட்சியத்தில் தெள்ளத் தெளிவாக சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் மேற்படி விசாரணை நீதிமன்றம் அரசு தாப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்து 1, 2, 3 எதிரிகளுக்கு குற்றவாளிகள் என தீர்மானித்து தீர்ப்பு பகரப்பட்டிருக்க வேண்டும்.

*vii)* மேற்படி வழக்கின் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு நிரூபணம் செய்யும் விதமாகவும், மேற்படி குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்கும் விதமாகவும், விசாரணை நீதிமன்றம் சாட்சியத்தில் தெள்ளத் தெளிவாக சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் மேற்படி விசாரணை நீதிமன்றம் அரசு தாப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்து 1, 2, 3 எதிரிகளுக்கு குற்றவாளிகள் என தீர்மானித்து தீர்ப்பு பகரப்பட்டிருக்க வேண்டும்.

*viii)* மேற்படி டாஸ்மாக் கடை எண்.7567-ல் எதிரி ரூ.7,54,890/- பணம் கையாடல் செய்தது அதற்கான ஆவணங்கள் சமூக நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அத்துடன் மேற்படி ஆவணங்களை ஊர்ஜிதம் செய்யும் விதமாக மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் விசாரணை நீதிமன்றம் மேற்படி ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்த பின்னீடு இந்த எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து தீர்ப்பு வழங்கியிருப்பது சட்டத்திற்கு முரணாக உள்ளது.

*ix)* மேலும் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் எதிரியானவர்கள் கையாடல் நடைபெற்ற டாஸ்மாக் கடையில் 1-ம் எதிரி மேற்பார்வையாளராகவும், 2, 3

எதிரிகள் விற்பனையாளர்களாகவும் பணிபுரிந்தார்கள் என்றும், மேற்படி டாஸ்மாக் கடை எண்.7567-ல் எதிரி ரூ.7,54,890/- பணம் கையாடல் நடைபெற்ற விவரத்தையும் தாங்கள் தணிக்கையின் போது அறிந்ததாகவும் அதன் பின்னீடு எதிரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டு மேற்படி கடையின் பொறுப்புகளை ஏற்று மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்ததாகவும், விசாரணை நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் டாஸ்மாக் கடை எண்.7567-ல் வழக்கு சம்பவம் நடைபெற்றதையும் எதிரியானவர்கள் அரசு தரப்பில் 1-ம் எதிரி மேற்பார்வையாளராகவும், 2, 3 எதிரிகள் விற்பனையாளராகவும் பணிபுரிந்ததையும் ஊர்ஜிதப்படுத்தி அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் விசாரணை நீதிமன்றம் எதிரியானவர்கள் பணி அமர்த்தப்பட்டதற்கான நியமன ஆணை இல்லை, வருகை பதிவேடுகள் சான்றாவணமாக அரசு தரப்பில் ஒப்படைக்கப்படவில்லை. மேலும் அரசு தரப்பில் ஆவணங்கள் இல்லை எதிரிகளுக்கு என்னென்ன பணி செய்ய வேண்டும் என நிபந்தனைகள் ஆணைகள் ஏதும் பிறப்பிக்கப்படவில்லை என கருதி மேற்படி 1, 2, 3 எதிரியானவர்களை மேற்படி டாஸ்மாக் கடையில் பணிபுரிந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என கருதி விசாரணை நீதிமன்றம் மேற்படி குற்றச்சாட்டுகளில் இருந்து எதிரிகளை குற்றமற்றவர்கள் என தீர்மானித்து போதிய ஆவணங்கள் இல்லை என கருதி விடுதலை செய்திருப்பது சட்டத்திற்கு புறம்பாக உள்ளது.

*x)* மேலும் அரசு தரப்பில் எதிரிகள் கையாடல் செய்ததற்கான ஆவணங்களை விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பில் முறையாக சமர்ப்பித்து

மேலும் எதிரிகள் பணிபுரிந்த டாஸ்மாக் கடைக்கு முந்தைய மாதத்திற்கு சரக்குகள் இருப்பு மற்றும் எதிரிகள் வேலை பார்த்த கடைக்கு சரக்குகள் அனுப்பப்பட்ட விவரங்கள் மற்றும் விற்பனை செய்யப்பட்ட விவரங்கள் மேலும் எதிரிகள் ரூ.7,54,890/- பணம் கையாடல் செய்த பணத்தின் கணக்குகள் ஆவணங்களாக அரசு தரப்பில் நீதிமன்றத்தில் ஒப்படைத்து அதற்கான சாட்சியத்தை நிரூப்பிக்கும் விதமாக சாட்சியம் விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பு வழக்கிற்கு வலுவூட்டிய நிலையில் விசாரணை நீதிமன்றம் மேற்படி ஆவணங்களையும் கருத்தில் கொள்ளாது எதிரிகளை விடுதலை செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

*xi)* மேலும் எதிரிகள் அரசு ஊழியர்கள் என்பதை நிரூபிக்கும் விதமாக அரசு தரப்பு சாட்சியம் சான்றாவணங்கள் முன்னிறுத்தப்படவில்லை என்றும், மேலும் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் கடமைகள் குறித்து அரசு தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை எனவும், எதிரி கடைக்கு மேற்பார்வையாளர் என்ற முறையில் அதிகாரம் வழங்கப்பட்டதை காண்பிக்கும் விதமாக அரசு தரப்பு ஆவணங்கள் தாக்கல் செய்யப்படாதது அரசு தரப்பு வழக்கிற்கு சந்தேகமாக அமைந்துள்ளது என மேற்படி கடை 7665-ல் பணிபுரிந்த ஊழியர்களை அரசு தரப்பு விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகளுக்கும் மேற்பார்வையாளர்கள் என்ற முறையில் வழங்கப்பட்ட அதிகாரத்தை எதிரிகள் தவறாக பயன்படுத்தி கையாடல் செய்துள்ளார்கள் என்பதை நிரூபிக்கும் விதமாக அரசு தரப்பு சாட்சியோ சான்றாவணங்களோ முன்னிறுத்தப்படவில்லை என

எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் அரசு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என விசாரணை நீதிமன்றம் தீர்மானித்து இருப்பது சட்ட விதிகளுக்கு முரணாக உள்ளது.

*xii)* மேலும் எதிரிகள் தரப்பில் மேற்படி வழக்கினை எதிரிகள் குற்றமற்றவர்கள் என விசாரணை நீதிமன்றத்தில் நிரூபணம் செய்வதற்கு எவ்வித சாட்சியங்களும் சான்றாவணங்களும் முன்னிறுத்தப்படாத சூழ்நிலையிலும் மேலும் எதிரிகள் மேற்படி கடையில் மேலாளராக பணி புரியவில்லை என எவ்வித சான்றாவணங்களையும் சாட்சியங்களையும் விசாரணை நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்படாத சூழ்நிலையில் மேற்படி விசாரணை நீதிமன்றம் தாமாக முன்வந்து எதிரிகள் மேற்படி கடையில் பணிபுரியவில்லை என தீர்மானித்து அதற்கான ஆவணங்களை அரசு தரப்பில் தாக்கல் செய்யவில்லை என தீர்மானித்து மேற்படி எதிரிகளை விடுதலை செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

*xiii)* மேலும் அரசு தரப்பில் 1 முதல் 6 வரையிலான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு அரசு தரப்பு சான்றாவணங்கள் 1 முதல் 10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு மேற்படி எதிரிகள் இதச பிரிவுகள் 409, 408-ன் கீழ் குற்றம் புரிந்ததாக சாட்சியங்கள் மூலமும் சான்றாவணங்கள் மூலமும் தெள்ளத் தெளிவாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ள சூழ்நிலையில் எதிரிகளையும் 1-ம் எதிரி மேற்பார்வையாளராகவும், 2, 3 விற்பனையாளர்களாகவும், பணிபுரிந்து ரூ.7,54,890/- பணம் இன்று வரை எதிரிகள் வசம் உள்ள நிலையில் மேற்படி ரூ.7,54,890/- பணம் இன்று வரை அரசிற்கு பெரும் இழப்பினை

ஏற்படுத்தியுள்ள நிலையில் மேற்படி விசாரணை நீதிமன்றம் இழப்பு ஏற்பட்டது உண்மை என அரசு தரப்பு ஆவணங்கள் மூலம் தெரியவருவதாகவும் ஊர்ஜிதம் செய்துவிட்டு 1 முதல் 3 வரையிலான எதிரிகள் அரசு பணி செய்ததற்கு அரசு தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என கருதி 1 முதல் 3 வரையிலான எதிரிகளை விசாரணை நீதிமன்றம் விடுதலை செய்திருப்பது சட்டத்திற்கு புறம்பாக உள்ளது.

*xiv)* மேற்படி மதுபான கடையில் 1ம் எதிரி மேற்பார்வையாளராகவும் 2 முதல் 3 வரையிலான எதிரிகள் விற்பனையாளர்களாகவும் பணிபுரிந்து ரூ.7,54,890/- பணம் கையாடல் செய்த பணம் இன்று வரை எதிரிகள் வசம் உள்ள நிலையில் மேற்படி ரூ.7,54,890/- பணம் இன்று வரை அரசிற்கு பெரும் இழப்பினை ஏற்படுத்தியுள்ள நிலையில், மேற்படி விசாரணை நீதிமன்றம் இழப்பு ஏற்பட்டது அரசு தரப்பு ஆவணங்கள் மூலம் தெரியவருவதாகவும் ஊர்ஜிதம் செய்துவிட்டு 1 முதல் 6 வரையிலான எதிரிகள் அரசு பணி செய்ததற்கு அரசு தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என கருதி 1 முதல் 3 வரையிலான எதிரிகளை விசாரணை நீதிமன்றம் விடுதலை செய்திருப்பது சட்டத்திற்கு புறம்பாக உள்ளது.

எனவே, மேல்முறையீட்டாளர்/புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மேல்முறையீட்டினை கோப்பிற்கு எடுத்து, சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2-ல் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.58/2014-ல் கடந்த 19.07.2023-ம் தேதியன்று வழங்கிய தீர்ப்பை நீக்கரவு செய்து இந்த மேல்முறையீட்டை அனுமதித்து உத்தரவிட வேண்டி இம்மேல்முறையீடு தாக்கல்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:09:41 +05'30'

செய்யப்பட்டுள்ளது.

6. இந்த மேல்முறையீட்டில் தீர்வுக்குரிய பிரச்சினைகள்:-

1 விசாரணை நீதிமன்றம் எதிரிகள் மீதுள்ள குற்றச்சாட்டான இதச பிரிவுகள் 408, 409-ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று கண்டுணர்ந்திருப்பது சரியானதா?

2 விசாரணை நீதிமன்றமான சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, ஆண்டு பட்டிகை வழக்கு எண்.58/2014-ல் கடந்த 19.07.2023-ம் தேதியன்று இவ்வழக்கு எதிரிகள்/எதிர்மேல்முறையீட்டாளர்களை விடுதலை செய்து பிறப்பித்த தீர்ப்பு ரத்து செய்யத்தக்கதா அல்லது நிலைநிறுத்தத்தக்கதா? அல்லது மாற்றியமைக்கத்தக்கதா?

3 இந்த குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

பிரச்சனைகள் : 1 முதல் 3:-

**7)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. கடந்த 25.05.2013-ம் தேதி இவ்வழக்கின் சாட்சி-1 தமிழ்நாடு வாணிபக்கழகம் டாஸ்மாக் மாவட்ட மேலாளர் திரு.சிலம்பரசன் தலைமையில் திருப்பத்தூர் டாஸ்மாக் கடை எண் 7567-ல் நூறு சதவீத தணிக்கை குழு மேற்கொண்ட போது தணிக்கை இறுதியில் சரக்கு வரவு இருப்பு மற்றும் விற்பனை தொகையில் ரூ.7,54,890/- குறைவு தொகை கண்டறியப்பட்டதில் 1 முதல் 3 எதிரிகள் மூவரும் சேர்ந்து தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட சொத்திற்கு கணக்கு காட்ட கடமைப்பட்டவர்களாக இருந்தும் பொதுக்கெட்ட எண்ணத்துடன் மேற்படி

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:05:51 +0530

விற்பனை தொகை ரூ.7,54,890/-யை வங்கியில் செலுத்தாமல் அரசு பணத்தை கையாடல் செய்து குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்து குற்றம் புரிந்துள்ளதாக 1-வது எதிரி மீது இதச பிரிவு 409-ன் கீழும், 2 மற்றும் 3 எதிரிகள் மீது இதச பிரிவு 408-ன் கீழும் குறிப்பிட்டு எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**8)** இருதரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்து விசாரணை நீதிமன்றம் 1வது எதிரி இதச பிரிவு 409-கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்தும், 2, 3 எதிரிகள் இதச பிரிவு 408-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, மேற்படி 2, 3 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்தும், 1 முதல் 3 எதிரிகளின் பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிட்டு தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி தண்டனைத் தீர்ப்பில் குறைவுற்றதாக கருதிய மேல்முறையீட்டாளர் இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**9)** இவ்வழக்கில் உள்ள சாட்சியங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ள அ.சா.1 திரு.சிலம்பரசன் என்பவர் தணிக்கை செய்தது பற்றியும், புகார் கொடுத்தது பற்றியும் கூறும் சாட்சி. அ.சா.2 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் தணிக்கைக்கு தணிக்கை குழுவுடன் சென்று தணிக்கை செய்தது பற்றி கூறும் சாட்சிகள். அ.சா.1 சிலம்பரசன் தனது சாட்சியத்தில் தான் தற்போது சென்னை டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் உதவி மேலாளர் (கணக்கு) ஆக பணிபுரிந்து வருகிறேன் என்றும், தான் சிவகங்கை மாவட்டத்தில்

கடந்த 2013-ம் ஆண்டு மாவட்ட மேலாளர் (பொறுப்பு) ஆக பணியில் இருந்த போது கடை எண். 7567 திருப்பத்தூரில் உள்ளது என்றும், கடந்த 25.05.2013-ம் தேதி டாஸ்மாக் கடையில் சரக்கு வரவு மற்றும் இருப்பு வங்கியில் செலுத்திய தொகையை சரிபார்த்த போது ரூ.7,54,890/- கையாடல் செய்தது தெரிய வந்தது என்றும், கையாடல் செய்தது கடை மேற்பார்வையாளர் மணிகண்டன், விற்பனையாளர்கள் ராமராஜா மற்றும் பிருந்தாவன் என்றும், அது குறித்து 27.05.2013-ம் எஸ்.பி ஆபிஸில் தான் புகார் செய்தேன் என்றும், அதிலுள்ள கையெழுத்து தன்னுடையது என்றும், புகார் அ.சா.ஆ.1 என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக காவல் துறையினர் தன்னை விசாரித்தார்கள் என்றும், தான் அப்போது கடைக்கு சென்று ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட ஆவணங்களை அளித்தேன் என்றும், அவை 25.05.2015-ம் தேதி தணிக்கையின் போது கண்டறியப்பட்ட குறைவு தொகை கையாடல் தொகை பற்றிய விவரம் அ.சா.ஆ.2 என்றும், 04.05.2013, 10.05.2013, 14.05.2013, 17.05.2013, 21.05.2013, 24.05.2013 ஆகிய தேதிகளில் சரக்கு விற்பனை பட்டியல் விபரம் (1 முதல் 6 பக்கங்கள்) அ.சா.ஆ.3 என்றும், வங்கியில் பணம் செலுத்தப்பட்ட தேதிகள் மற்றும் செலுத்தப்பட்ட தொகை பற்றிய விவரம் அ.சா.ஆ.4 என்றும், ICICI வங்கியில் பணம் பரிமாற்றம் விபரம் ( 1 முதல் 13 பக்கங்கள்) அ.சா.ஆ.5 என்றும், ஐசிஐசிஐ வங்கியில் பணம் செலுத்தப்பட்ட *(Pay Slip)* ரசீது விவரம் (1 முதல் 6 பக்கங்கள்) அ.சா.ஆ.6 என்றும், இவ்வழக்கின் எதிரி 2வது எதிரி ராமராஜா முன்னிலையில் 25.05.2013-ம் தேதி திருப்பத்தூர் டாஸ்மாக் கடை எண்.2567-ல்

தணிக்கை செய்து எதிரி ராமராஜாவிடம் கையெழுத்து பெறப்பட்ட *Invoice, Denomination and Audit voucher* விபரம் (1 முதல் 6 பக்கங்கள்) அ.சா.ஆ.7 என்றும், இது சம்பந்தமாக மதுரை முதுநிலை மண்டல மேலாளர் மற்றும் மேலாண்மை இயக்குனர், சென்னை ஆகியோருக்கு அன்றைய தினமே இந்த சம்பவம் குறித்து தகவல் சொன்னேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**10)** மேலும் அ.சா.2 தனது சாட்சியத்தில் தான் தற்போது காரைக்குடியில் வசித்து வருகிறேன் என்றும், தான் டாஸ்மாக்கில் இருந்து உதவியாளராக இருந்து பணிஓய்வு பெற்றுள்ளேன் என்றும், கடந்த 2016 ஜூன் மாதம் வரையில் டாஸ்மாக்கில் 1-வது விற்பனையாளருக்கு உதவியாளராக இருந்து வந்தேன் என்றும், கடந்த 2013-ம் ஆண்டு டாஸ்மாக் மாவட்ட மேலாளர் அலுவலகம், சிவகங்கையில் 1-வது விற்பனையாளர் உதவியாளராக வேலை பார்த்து வந்த போது சிவகங்கை மாவட்ட மேலாளர் ஆர்.சிலம்பரசன் அவர்கள் திருப்பத்தூர் கடை எண். 7567-ல் தணிக்கையாளர்கள் ஹரிகரன், ரமேஷ் மற்றும் கண்ணப்பன் ஆகியோர்களுடன் கடையை ஆய்வு செய்வதற்கு போயிருந்தார்கள் என்றும், அவர்களது அறிக்கையில் கடை பணியாளர்கள், மேற்பார்வையாளர் மணிகண்டன், விற்பனையாளர் ராமராஜா மற்றும் பிருந்தாவன் ஆகியோர்கள் கையாடல் செய்த தொகை ரூ.7,54,890/- என்று அறிக்கை சமர்ப்பித்தனர் என்றும், அதன் பிறகு மாவட்ட மேலாளர் மூலமாக சிவகங்கை மாவட்ட குற்றப் பிரிவில் இது குறித்து புகார் அளிக்க முடிவு செய்யப்பட்டது என்றும், அதன் பேரில் கடந்த 27.05.2013-ம் தேதி அதன் படி புகார் செய்யப்பட்டது என்றும், இது பற்றி 18.08.2013-ம் தேதி அன்று

காவல் துறையினர் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**11)** மேலும், இவ்வழக்கில் அ.சா.3 தனது சாட்சியத்தில் தான் இப்பொழுது சிவகங்கை மாவட்ட டாஸ்மாக் அலுவலகத்தில் சூப்பர்வைசராக பணி செய்து வருகிறேன் என்றும், இந்த வழக்கின் எதிரிகளைத் தனக்கு தெரியும் என்றும், கடந்த 25.05.2013-ம் தேதி கடை எண்.7567 திருப்பத்தூரில் உள்ளது என்றும், அதில் (பிசிக்கல் வெரிபிகேசன்) செய்யப்போகும் போது வரவு செலவு பணம் சார்ட்டேஜ் உண்டானது என்றும், தானும் அன்றைய தினம் சென்றேன் என்றும், தன்னுடன் அ.சா.1. மற்றும் ஆடிட்டர் உதவியாளர் ஹரிகரன், ரமேஷ், கண்ணப்பன் ஆகியோர்கள் வந்தார்கள் என்றும், கடையில் உள்ள வரவு செலவு புத்தகத்தை ஆய்வு செய்யும் போது கடையின் இருப்பு, கடையின் விற்பனை தொகையில் தான் அந்த சார்ட்டேஜ் உண்டானது என்றும், மாவட்ட மேலாளர் இந்த வழக்கின் 2-ம் எதிரி ராமராஜாவிடம் வாக்குமூலம் வாங்கினார் என்றும், அதன் பிறகு ஆவணங்களுடன் தாங்கள் சிவகங்கை மாவட்ட அலுவலகத்திற்கு வந்து இது குறித்து மேலதிகாரிகளிடம் புகார் செய்தோம் என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** மேலும், இவ்வழக்கில் அ.சா.4 தனது சாட்சியத்தில் தான் தற்பொழுது சிவகங்கை மாவட்டம் நாலுகோட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றும், இதற்கு முன்பு டாஸ்மாக் கடையில் வேலை பார்த்து இப்பொழுது வீட்டில் உள்ளேன் என்றும், கான்ட்ராக்ட் வேலை என்பதால் கடந்த 2013-ம் ஆண்டு அந்த

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:06:26 +0530

வேலை முடிந்தது என்றும், தான் எம்.பி.ஏ. பட்ட படிப்பு முடித்துள்ளேன் என்றும், இந்த வழக்கின் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், கடந்த 25.05.2013-ம் தேதி காலை 11.00 மணிக்கு டாஸ்மாக் எண் 7567 என்ற கடைக்கு பணம் மற்றும் ஸ்டாக்கை ஆடிட்டிங் செய்து ஆய்வு பண்ண தான் மற்றும் கண்ணப்பன், ஹரிஹரசுப்பிரமணியன் ஆகியோர்களும், அ.சா.1, 2, 3 உடன் சென்றோம் என்றும், கடைக்கு சென்று அங்கு இருப்பு மற்றும் வரவு செலவுகளை ஆய்வு செய்தோம் என்றும், அதில் ரூ.7,54,890/- குறைவாக (சார்ட்டேஜ்) இருந்தது என்றும், மணிகண்டன் அவர்களது தலைமையில் மூன்று நபர்கள் சேர்ந்து ஆடிட்டிங் செய்வது வழக்கம் என்றும், மணிகண்டன் அன்றையதினம் தங்களுடன் ஆய்வு செய்ய வரவில்லை என்றும், தாங்கள் மட்டும் தான் சென்றோம் என்றும், ஹரிஹரசுப்பிரமணியன், கண்ணப்பன், தான் ஆகிய நபர்கள் தான் எப்பொழுதும் ஆய்வு செய்வது வழக்கம் என்றும், அதன்படி தாங்கள் அன்றையதினம் ஆய்வு செய்தோம் என்றும், சிவகங்கை மாவட்ட டாஸ்மாக் அலுவலகத்தில் இது குறித்து சிலம்பரசன் புகார் செய்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**13)** மேலும் அ.சா.5 தனது சாட்சியத்தில் தான் தற்பொழுது சிவகங்கை டவுணில் வசித்து வருகிறேன் என்றும், தான் இப்பொழுது மதுரையிலுள்ள கார்மென்ட்ஸ் கம்பெனியில் பர்சேசிங் டிபார்ட்மென்ட்டில் வேலை பார்த்து வருகிறேன் என்றும், இந்த வழக்கின் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், இதற்கு முன்பு பார்த்திருக்கிறேன் என்றும், கடந்த 2013-ம் ஆண்டு தான் டாஸ்மாக் கடையில் ஆடிட்ங் அசிஸ்டென்டாக வேலை பார்த்து வந்தேன் என்றும், கடந்த

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:06:34 +0530

25.05.2013-ம் தேதி மதியம் சுமார் 1.00 மணிக்கு கடை எண் 7567 என்ற எண்ணுள்ள டாஸ்மாக் கடைக்கு சென்றேன் என்றும், 2-ம் எதிரி ராமராஜா அளித்துள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து தன்னுடையது என்றும், அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.8 என்றும், 3-ம் எதிரி பிருந்தாவன் அளித்துள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து தன்னுடையது என்றும், அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.9. என்றும், இந்த கையெழுத்துக்களை சிவகங்கை மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**14)** மேலும் இவ்வழக்கில் ஆவணங்களை பரிசீலனை செய்யும் போது, இவ்வழக்கின் 1-வது எதிரி டாஸ்மாக் கடை எண்:7567-ல் பணிபுரிந்ததாக அரசுத்தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளபோதிலும், 1-வது எதிரி டாஸ்மாக் கடை எண்:7567-ல் மேற்பார்வையாளர் என்ற முறையில் அதிகாரம் வழங்கப்பட்டதை காண்பிக்கும் விதமாக அரசு தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாதது அரசு தரப்பு வழக்கை சந்தேகிக்கும் விதமாக அமைந்துள்ளதாலும், டாஸ்மாக் கடை எண்:7567-ல் பணிபுரிந்த ஊழியர்களையும் அரசு தரப்பில் விசாரணை செய்யப்படவில்லை என்பதாலும், மேலும் 1-வது எதிரிக்கு மேற்பார்வையாளர் என்ற முறையில் வழங்கப்பட்ட அதிகாரத்தை 1-வது எதிரி தவறாக பயன்படுத்தி கையாடல் செய்துள்ளார் என்பதை நிரூபிக்கும் விதமாக அரசு தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தவில்லை என்பதும்

தெளிவாக தெரிகிறது.

**15)** மேலும் இவ்வழக்கில் 2 மற்றும் 3 எதிரிகள் டாஸ்மாக் கடை எண்:7567-ல் பணிபுரிந்ததாக அரசுத்தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளபோதிலும், 2 மற்றும் 3 எதிரிகள் டாஸ்மாக் கடை எண்:7567-ல் விற்பனையாளர்களாக பணியமர்த்தப்பட்டனர் என்பதை காண்பிக்கும் விதமாக அரசு தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், மேலும் 2, 3 எதிரிகளுக்கு டாஸ்மாக் கடை எண்:7567-ல் எந்த சொத்து ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை காண்பிக்கும் விதமாக அரசு தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், 2, 3 எதிரிகளுக்கு டாஸ்மாக் கடையில் என்ன பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளது மற்றும் 2, 3 எதிரிகள் கடந்த 25.05.2013-ம் தேதி பணியில் இருந்துள்ளார்கள் என்பதை காண்பிக்கும் விதமாக அரசு தரப்பில் ஆவணங்கள் மற்றும் வருகைப்பதிவேட்டினை தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், 2, 3 எதிரிகள் டாஸ்மாக் கடையில் விற்பனையாளர்கள் என்ற முறையில் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி கையாடல் செய்துள்ளார்கள் என்ற அரசு தரப்பு கூற்று சந்தேகிக்கும் விதமாக அமைந்துள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**16)** எனவே மேற்கண்ட வகையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் விசாரணை நீதிமன்றம் எதிர்மேல்முறையீட்டாளர்கள்/எதிரிகள் குற்றவாளிகள் இல்லையென்று விடுதலை செய்து தீர்வு கண்டுள்ளதில் சட்டப்படியும், வழக்கு பொருண்மைகளின்படியும்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:06:52 +0530

வழங்கியுள்ள தண்டனை தீர்ப்புரையில் குறுக்கிட வேண்டிய அவசியம் ஏதுமில்லை என இந்நீதிமன்றம் கருதுவதால், இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகிறது.

**இறுதியாக,** இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தும், சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, ஆண்டுபட்டிகை வழக்கு எண்.58/2014-ல் கடந்த 19.07.2023-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை உறுதி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஏபரல் திங்கள் 21-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:07:01 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

**நகல்:**
நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2,
சிவகங்கை.

முதன்மை அமர்வு நீதிமன்றம்,
சிவகங்கை.

குற்றவியல் மேல்முறையீட்டு
வழக்கு எண்.97/2025
தீர்ப்புரை நாள்: 21.04.2026